Registerd as a News Paper at the G. P. O. Sri Lanka Under No. QB/8965/80

விலை சதம் 5)

# ஐக்கியதீபம்

மலர் : 36 ஆவணி 1980 இதழ் 1

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
(யாழ்ப்பாணம்)
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங் | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச. | 10 |
| கடன் முறி ஐ நா ச | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |
| கேள்விப் பத்திரம் | 10 |


## கூட்டுறவால் தேசீய

# பிரச்சினைகளைத் தீர்க்கலாம்?

## தேசீய கூட்டுறவுச் சபைத் தலைவர் கருத்து

**"எங்களது பல தேசீயப் பிரச்சினைகளுக்கு கூட்டுறவு மூலமே நல்ல தீர்வு காணலாம்.**

**கூட்டுறவில் சேர்ந்து உழைப்பவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் எல்லோரும் கூட்டுறவாளர்கள்தான். அவர்களுக்கு ஏற்றத் தாழ்வுகள் இல்லை. எத்தகைய பாகுபாடோ துவேஷமோ இல்லாத புனித இயக்கமே கூட்டுறவு"**

மேற்கண்டவாறு ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. சி. எம். பி. பொகோலகம வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்மாவட்டக் குழு கொண்டாடிய கூட்டுறவுத்தின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மேற்படி குழுவின் தலைவர் திரு மு. ஆலாலசந்தரம் தலைமை தாங்கினார்.

மேலும் அவர் பேசுகையில மகளிர் பாவனையாளர் கல்வியை விரிவுபடுத்தல், வீரசிங்கம் மண்டபத்துக்கு அருகிலுள்ள காணியில் கூட்டுறவுக் கல்லூரிக்கான கட்டிடத்தை நிறுவுதல், கூட்டுறவுக் கல்வியை வளர்த்தல் ஆகிய மூன்று பெரிய பணிகளை தாம் யாழ்மாவட்டத்தில் மேற்கொள்ளத் திட்டமிடடிருப்பதாகக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சமுகமளித்திருக்கும் அக் கூட்டத்திலே தான் உரையாற்றுவது தனக்கு மிகவும் வாய்ப்பான மகிழ்ச்சியளிக்கும் ஒரு சந்தர்ப்பம் எனக் கூறிய அவர், கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிக்க எதிர்க்கட்சித் தலைவர் உதவிபுரிய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்,

தொடர்ந்து அவர் பேசியதாவது : தனியார்துறை இலாபத்தையே தனது இலட்சியமாகக் கொண்டது. கூட்டுறவுத்துறை அப்படியில்லை. ஆதலால் தனியார் துறையில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் கூடுதலான சம்பளத்தைப்போல் கூட்டுறவுத் துறையில் வழங்குவது கஷ்டமாகும். எனினும் கூட்டுறவு ஊழியர் சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென நான் தகவுரை செய்திருக்கிறேன். இதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் வளமுள்ளவையாக வளர பணியாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக இயங்க முடியாத ஆபத்து இன்று ஏற்பட்டிருக்கிறது. அதன் வளர்ச்சிக்கான வசதிகள் குறைக்கப்பட்டு தனியார் துறைக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட எதிர்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினர்,

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு இயக்கம் பிரிக்கமுடியாத ஓர் அம்சமாக இருக்கிறது. இத்தகைய ஓர் இயக்கத்தின் நல் வளர்ச்சிக்கு அரசு வேண்டிய சலுகைகளையும் வசதிகளையும் வழங்கவேண்டும் இதைவிட்டு தனியார் துறையை வளர்க்கும் வகையிலே அதனுடன் கூட்டுறவுத் துறையைப் போட்டி போட வைப்பது சரியல்ல கூட்டுறவை வளர்க்கும் செயலாக இதை நாம் கொள்ள முடியாது என திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது : மக்கள் பொருளாதார சமூகப் பிரச்சினைகளைக் களைவதில் சேவை செய்வதற்கென்றே கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது இதனை வளர்ப்பதற்கு ஒற்றுமையும், ஒத்துழைப்பும் அவசியம்.

ஆதாய நோக்கையே முழுக்க முழுக்கத் தனது கொள்கையாகக் கொண்டிருக்கும் தனியார் துறையைப் போன்றதல்ல கூட்டுறவு இயக்கம். கூட்டுறவின் தன்மையையும். அதன் கொள்கைகளையும் அரசு உணர்ந்து நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு அதனைக் கருவியாகக் கையாள வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## கூட்டுறவுத் திணைக்களத்தின் பொன்விழா

கூட்டுறவுத் திணைக்களம் தனது பொன்விழாவினை இலங்கை முழுவதும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இவ்விழாவினை யாழ் மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களம் இம்மாதம் 17-ந் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாட ஒழுங்குகளைச் செய்து வருகின்றது.

யாழ் மாவட்ட அமைச்சர் திரு.யு. பி விஜயகோன் விசேட அழைப்பின் பேரில் இவ்விழாவில் கலந்து கொள்வார்.

கருத்தரங்கு, சொற்பொழிவுகள். கலைநிகழ்ச்சிகள் முதலியன இவ்விழாவில் இடம்பெறும்

## தமிழ்த்தொண்டருக்கு அஞ்சலி

பன்மொழிப் புலவரும், தமிழ் அறிஞருமாகிய அருட்திரு. சேவியர் தனிநாயக அடிகளார் 1-9-80ல் இவ்வுலகை விட்டு நித்தியத்திற்கு யாத்திரை செய்துவிட்டார்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' 'என் கடன் பணி செய்து கிடப்பதே' 'என்னை இறைவன் நன்கு படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்னும் இனிய கவிதை வரிகளுக்கெல்லாம் பொருள்களாக அப்பொருள்களின் உணர்ச்சிகளாக, அவற்றின் திகட்டா நயங்களாக திகழ்ந்த அடிகளார் அழியாக் கவிதை வரிகளிலே என்றும் வாழ்வார்.

'இருந்தமிழே உன்னால் இருந்தேன், விண்ணோர் விருந்தமுதமானாலும் வேண்டேன்' என்று கூறாமல் கூறுவது போல், தமிழமுதைச் சுவைத்துத் திருத்தொண்டாகத் தமிழ்த் தொண்டினை ஆற்றிய அடிகளார் இன்று விண்ணோர் விருந்தமுதைச் சுவைக்கச் சென்றுவிட்டாரா? அன்னாருக்கு நாம் ஐக்கியமுடன் தீபமேற்றி அஞ்சலி செய்கின்றோம்.

## உயர்பிரிவு மாணவர் கூடுதலானோர் சித்தி

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி உயர்பிரிவு மாணவர்களுக்கு 1979 ம் ஆண்டு மார்ழி மாதத்தில் நடைபெற்ற பரீட்சையில் கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். கல்லூரியின் சேவையைக் குறிப்பிட்டுக் காட்டும் அம்சமாக பரீட்சை முடிவு விளங்குகிறது எனக் குறிப்பிடப்படுகிறது.

குறித்த பரீட்சையில் பின்வருவோர் சித்தியடைந்துள்ளனர்.

வி. ஜெகதீசன், எம்.வேசுராசா வி. கயிலைநாதன் ஏ மரியநாயகம் எஸ் நகுலேஸ்வரன், ஜே. புவனராசேஸ்.பீ. ஜே. இராசசிங்கம், எஸ் இராஜமோகன் எஸ். சந்திரலிங்கம். வி. தவராசா, எம். வேலாயுதபிள்ளை,

### ஞானசித்தி

சி. எமில் பிகுருடோ, என். ஜெயராசா, என். கனகசிங்கம், ரி முருகதாசன், ரி. இராசசிங்கம், எஸ். இராசமலர், ஏ.சிங்கராசர், வி. சண்முகம், எஸ். சித்திரா, எஸ். சபாரத்தினம்,

# ப. நோ. கூ. சங்க முகாமையும் இன்றைய நிலையும்

ஆர். அரியரத்தினம்

பொருளாதாரத் துறையிலே நலிவுற்ற மக்கள் கபீட்சந்தை வளர்க்க சுய உதவி, பரஸ்பரஉதவி, என்ற தாரக மந்திரப்படி சமத்துவமாக சுதந்திரமாக ஒன்றுசேரும் செயல் முறையே கூட்டுறவு ஆகும்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டகூட்டுறவு இயக்கம் மக்களின் பலநோக்கங்களைப்பூர்த்திசெய்வதால்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் மக்களால் நிர்வகிக்கப்படும் ஒரு இயக்கமாகத் திகழ்கின்றது. எனவே கூட்டுறவுச் சங்க முகாமையில் பொதுச்சபை நெறியாளர் குழு பொது முகாமையாளர், பணியாளர்கள் கிளைக் குழுக்கள் ஆகியன அங்கம் வகிக்கின்றன. பொதுச் சபையைப் பொறுத்தவரையில் அங்கத்தவர்கள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றனர். இவர்கள் சட்டப்படி சங்கத்தின் சொந்தக்காரர்கள் ஆவதோடு சங்கத்தின் வாடிக்கையாளர்களாவும் இருக்கின்றனர். பொதுச்சபை பொதுவாக கொள்கைகளை வகுத்துக் கொள்ளும். உபவிதிக்கமைய சங்கத்தின் முகாமையைச் செய்வதற்கு ஒரு இயக்குநனர் சபை அமைக்கப்படுகின்றது. இச்சபையானது பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் செயற்பட வேண்டும். இதன் மூலம் பொதுச்சபை இயக்குனர் சபையைக் கட்டுப்படுத்துகின்றது. பொதுச் சபையானது காலத்துக்குக் காலம் கூடி கணக்கு அறிக்கைகள் பொது அறிக்கைகள் என்பவற்றை ஆராய்வதோடு உபவிதி நடைமுறைவிதி சட்டவிதி என்பவற்றிக்கு அமைய இயக்குனர் சபையை இயங்கச் செய்வதோடு அவ்வாறு அவர்கள் இயங்குகின்றார்கள்? என்பதனை ஆராய்ந்து கட்டுப்படுத்த உரிமையுண்டு. ஆனால் நாளாந்த நிர்வாக கடமைகளை ஆற்ற பொதுமுகாமையிலர் ஒருவரை நியமித்து அவரின் கீழ் இயங்க தகுதிவாய்ந்த பணியாளர்களை தெரிவு செய்து, பொறுப்புக்கள் அதிகாரங்களை ஒப்படைத்து சங்கத்தில் நோக்கங்களை நெறியாளர் குழு உபவிதிக்கமைய செயற்படுத்தும். நெறியாளர் குழு தளராநோக்கத்துடனும், கடமையுணர்ச்சியுடனும் செயற்பட நெறியாளர் சபைக்கும் பணியாளர் குழுவுக்குமிடையே பரஸ்பர தொடர்பு இருக்க முகாமையினர் பாலமாக இருப்பதுடன் திறம்பட செயல்பட வேண்டியவராகவும் நெறியாளர் குழு எடுக்கும் ஒவ்வொரு தீர்மானங்களையும் வெவவேறு மட்டங்களுக்கு எடுத்துச் சென்று நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் முகாமையாளரே செய்வார்.

பல நோக்குச் சங்க முகாமை இவ்வாறு செயற்படும் போதிலும் இன்றைய நிலையில் தனது முழு சக்தியையும் இயன்றளவு பிரயோகித்து சோதனை மிகுந்த காலக்கட்டத்தில் முன்றே வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. ஏனெனில் இன்று அரசாங்கத்தின் வேறுபட்ட கொள்கையினுல் தனிப்பட்ட வியாபாரிகளோடு போட்டி போட்டு வியாபாரம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. சென்ற காலங்களிலே பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் குறித்த இலக்கை அடைவதற்கு ஏதுவாக இருந்தது பங்கீட்டுப் புத்தகமாகும். அரசு மக்களுக்குப் பங்கீட்டுப் பொருட்களைக் கட்டுப்பாட்டுப் பொருட்கள் என விதித்து அதனை விற்பதற்கு சங்கத்திற்கு ஏகபோக உரிமை அளிக்கப்பட்டிருந்தமையால் மக்கள் சங்கங்களை நாடினுர்கள் இதன் காரணமாக அங்கத்தவரிடையே ஓர் பற்று நிறைந்த தன்மை காணப்பட்டது. இதனுல் உச்ச பயனை அடைய முகாமைக்கு எதுவாக இருந்தது.

இதனுல் இன்று பங்கீட்டுப் புத்தகங்கள் ரத்துச் செய்யப்பட்டு கட்டுப்பாட்டுப் பொருட்களுக்கிருந்த தடையை நீக்கி சகல பொருட்களையும் விற்பனை செய்ய, இறக்குமதி செய்ய யாவருக்கும் ஏகபோக உரிமை அளிக்கப்பட்டமையால் தனிப்பட்ட முதலாளிகள் சங்கத்துடன் போட்டி போட்டு வியாபாரத்தை நடத்துகின்றார்கள். இதன் காரணமாக மக்கள் சங்கங்களை நாடாது தனிப்பட்ட வியாபாரிகளை நாடுகின்றுர்கள். இதனுல் இன்று சங்கத் தொழிற்பாடுகள் யாவும் மந்த நிலையை அடைந்திருப்பதோடு அங்கத்தவரிடையே பற்றற்ற தன்மையையும் காணக்கூடியதாகவுமிருக்கின்றது.

இந்த நிலையிலே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் முகாமைத் தொழிற்பாடுகளை ஸ்திரப்படுத்துவதன் மூலமே உச்ச பயனை அடைக்கூடியதாக இருக்கும். அளவிடப்பட்டசாதனங்களாகியமனித சக்தி, பணம், பொருள், முறைகள், இயந்திர சாதனம் என்பவற்றைக்கொண்டு திட்டமிட்டு, அமைத்து அதிகாரம் வழங்கிச்குவிந்து கட்டுப்படுத்தி குறைந்த செலவில் கூடியபயனை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இதேவேளையில் பங்காளர், பணியாளர் வாடிக்கையாளர்கள் அல்லது பொது மக்கள் ஆகிய மூன்றுசாராரையும் திருப்திப்படுத்தவேண்டியபொறுப்பும்முகாமையைபொறுத்தாகும். பணியாளரை பொறுத்தளவில் நியாயமான சம்பளம், வேலைநேரம், சேவை, பாதுகாப்பு, பதவி உயர்வு, பிற்கால சேம நலம் ஆகியவற்றை எதிர் பார்ப்பர்.

இதுகிடைக்காவிட்டால் அவர்கள் மத்தியில் அமைதியின்மை காணப்படும். மக்களைப் பொறுத்தளவில் சேவை தடையின்றி, நியாயமானவிலையில்பொருட்களை பெற விரும்புவர். அது கிடைக்காவிடில் அதிருப்தி அடைவர் எனவே முகாமை இம் மூன்று பகுதியினரையும் இணைத்து ஸ்தாபன வெற்றிக்கு உழைக்க வேண்டும். சங்கமானது தனது முகாமை தொழிற்பாட்டை நிறைவேற்ற சங்கத்தின் முதுகெலும்பாக உள்ளவர்கள். சங்கப் பணியாளர்கள் அவர்களே தொழிற்பாட்டை நடத்துபவர்களும் மக்களோடு தொடர்பு கொள்பவர்களும், எனவே அவர்கள் மத்தியில் விரக்தி மனப்பான்மை ஏற்படா வகையில் முகாமையினுல் ஊக்குவிக்கப்படவேண்டும். இந்த ரீதியில் அவர்கள் இது எங்கள் தாபனம் என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

எனவே இன்றைய நிலைக்கேற்ப பணியாளர்கள் மத்தியிலே அடிக்கடி கருத்தரங்குகளை ஏற்படுத்தி அவர்கட்கு சங்க நிலையை எடுத்துக் கூறி ஆவலைத் தூண்டுதல் மூலமும் பொதுசன தொடர்பை ஸ்திரப்படுத்துவதன் மூலமும் அதாவது கிளை ரீதியாக

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# உடலுக்கு உகந்த ஊட்டச் சத்து உணவு

மகளிர் பாவனையாளர் கல்வித்தகவல் திட்டம் காகொலவில் நடத்திய கருத்தரங்கில் இடம் பெற்ற கலந்துரையாடலின் சுருக்கம்—ஆர்.

நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும் பலம் வாய்ந்த உடலினைப் பெறுவதற்கும் சிறந்த வகை உணவுகளை உண்ண வேண்டும்.

சிறந்தவகை உணவுகள் மூன்று வகைப்படும். அவையாவன உடலை வளர்க்கும் உணவுகள், உடலுக்குச் சக்தியளிக்கும் உணவுகள், உடலுக்குப் பாதுகாப்புவழங்கும்உணவுகள்.

மோட்டார் வண்டியின் ரயர் தேய்ந்தால் புதியதோர் ரயரை அதற்குப் போடலாம். உடலின் பகுதி தேய்ந்தால் அதனை புதிதாக வாங்க முடியாது. தேய்ந்த உடலினைப் புதிதாக வளர்ச்சி பெறச் செய்யும் உணவு வகைகளை உண்ணுதலே அதற்கு ஏற்ற வழியாகும்.

புரதச்சத்து நிறைந்த உணவுவகைகளே உடலை வளர்க்கும் சக்தியுடையவையாகும். புரதச்சத்து பெரும்பாலும் மாமிச உணவுகளிலும் பருப்பு வகைகளிலும் உள்ளன. சோயா, அவரை, பருப்பு, தயிர், பால், இறைச்சி, மீன், முட்டை, முதலியவற்றில் புரதச்சத்து இருக்கின்றது.

அடுத்தாக, எமது உடலுக்கு சக்தியை வளர்க்கும் உணவுகளைப் பற்றி ஆராய்வோம். மோட்டார் வண்டி இயங்குவதற்கு எரிபொருள் எவ்வாறு அவசியமாகின்றதோ எமது உடல் இயங்குவதற்கும் சக்தியை அளிக்கும் உணவு அவசியம்.

அதிக வேலை செய்வோருக்கும் விளையாட்டுக்களில் ஈடுபடுவோருக்கும் சக்தியை அளிக்கும் உணவுகளாவன: ஈரப்பலா, சோறும், மரவள்ளிக்கிழங்கு, வாழைக்காய் பாண், சோறு எண்ணெய், கொழுப்பு உணவுகளும் சக்தியளிப்பவையாம், பட்டர், நெய், மாஜரின், தேங்காய், தேங்காய்எண்ணெய் முதலியவற்றிலும் சக்தியை ஊட்டும் தன்மை இருக்கின்றது.

அடுத்தது பாதுகாக்கும் உணவு. பாதுகாக்கும் உணவை உண்ணுது விட்டால் எமது உடலை நோய் பாதிக்கும், நோயை எதிர்க்கும் சக்தியில்லாத நிலைக்கு எமது உடல் போய் விடும். விற்றமின் கனிப்பொருள் எமது உடலைப் பாதுகாக்கின்றது.

விற்றமின் பலவகைப்படும். அவை எமது உடலின் கண், பல், எலும்பு, நரம்பு, தோல், இரத்தம் முதலிய பகுதிகளைப் பாதுகாக்கின்றன.

கனிப்பொருள்கள் சில உள. இவை பல், எலும்பு, இரத்தம் முதலியவற்றை வலுப்படுத்துகின்றன. எனவே இவற்றைப் பேணுவதற்கு விற்றமின் கனிப்பொருள் அடங்கிய உணவு வகைகளை உண்ணவேண்டும். வல்லாரை, பொன்னாங்காணி, தக்காளி, பூசணி பப்பாசி, வாழைப்பழம், கரட், மாம்பழம், முதலியவை விற்றமின் கனிப்பொருள் அடங்கிய உணவுகளாகும்.

பழைய காய்கறி, பழங்கள் ஆகியவைகளிலும் பார்க்க புதிய காய்கறிகளிலு, பழங்களிலும் விற்றமின் கனிப்பொருள்கள் அதிகமுண்டு காய்கறிகளைச் செடியிலிருந்து பிடுங்கிய பின்னர் விற்றமின் கனிப்பொருள் சத்துக்கள் குறையத் தொடங்கும். காய்கறிகளை அதிக நாள் வைத்திருக்கவேண்டுமானுல் குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்க வேண்டும்.

இவைகளைச் சமைக்கும் போதும் விற்றமின் கனிப்பொருள் குறைவதனுல் இயன்றவரை பச்சையாக உண்ணுதல் சிறந்தது. பச்சையாக உண்ண முடியாதவற்றை மாத்திரம் சமைத்து உண்ண வேண்டும்: சமைக்கும் போது இயன்றவரை கவனமாக இருந்தால் விற்றமின் கனிப்பொருள் குறையாது பாதுகாக்கலாம். விற்றவின் கனிப்பொருள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கு சமைத்தவுடன் உண்ணல் வேண்டும்.

காய்கறிகளை வெட்ட முன்பு கழுவ வேண்டும். தோலை நீக்க வேண்டுமானுல் சிறிதளவே நீக்க வேண்டும். தோலில் விற்றமின் அடங்கியுள்ளது.

நீர் அல்லது பாலைச் சிறிதளவு வைத்துச்சமைத்தல் சிறந்தது. நீர் கொதித்து வரும்போது வெட்டிய காய்கறியை இடல் வேண்டும். சமைக்கும் போது சட்டியை மூடிவைக்க வேண்டும் தேங்காய்ப் பாலில் சமைத்தல் சிறந்த முறையாகும்.

# கொள்கை விளக்கம்

**தமிழக கூட்டுறவு அமைச்சர் தமது கூட்டுறவுத் துறையில் 1980–81 ஆண்டிற்கான கொள்கை விளக்கம் குறித்து ஆற்றிய உரையின் சுருக்கம் எமது கூட்டுறவு வளர்ச்சிக்கு உதவும் எனக் கருதி இங்கு தரப்படுகிறது.**

கூட்டுறவு இயக்கம் தமிழ் நாட்டில் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில், குறிப்பாக வேளாண்மைக் கடன் மற்றும் இடுபொருட்களை வழங்குதல், விளை பொருட்களை விற்பனை செய்தல், இன்றியமையாத நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் க்களுக்கு உதவி வருகிறது.

## முன்னேற்றம்

1979—80-ல் குறுகிய காலக் கடன்களும் மத்திய காலக் கடன்களும்42 70 கோடி ரூபாய் அளவிற்கும் நீண்ட காலக் கடன்கள் 8·85 கோடி ரூபாய் அளவிற்கும் வழங்கப்பட்டன. இவையன்றி ந[illegible]கக் கடன்கள் 111·42 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன. 65·83 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்கள் விற்கப்பட்டன. 140·92 கோடி ரூபா மதிப்புள்ள நுகர் பொருட்கள் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களால் சில்லறை விற்பனை செய்யப்பட்டன. 'ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு அங்காடி' எனனும் திட்டத்தின்கீழ் மார்ச் 80 வரை, 18 66 கோடி ரூபா மதிப்புள்ள இன்றியமையாத நுகர்பொருட்கள் கிராம மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## விவசாயக் கடனுதவி

இம் மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாக 4742 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன. இச்சங்கங்கள் குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. விவசாயம் குறித்த தேசிய ஆணைக்குழு அம்மாநிலத்தின் குறுகிய கால, மத்திய காலக் கடன் தேவைகள் ஏறத்தாழ 31[illegible] கோடி ரூபாய் ஆகுமென மதிப்பிடப் பட்டுள்ளது. அத்தொகையில் 40 சதவீதத்தை 1977–78-ல் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கின. ஆறுவது திட்ட இறுதியில் இதை 60 சதவீதத்திற்கு உயர்த்தத் திட்டமிடப்பட்டது. ஆனல், தவணை தவறிய கடன்கள் இதற்கு முன்பு இல்லாத அளவிற்கு அதிகரித்ததாலும், அதன் காரணமாகப் புதுக்கடன்கள் வழங்குவது குறைந்ததாலும், கடன் தேவைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறைவு செய்த பங்கு 1978—79-ல் 33 சதவீதத்திற்கும், 1979—80-ல் 14 சதவீதத்திற்கும் குறைய நேரிட்டது. விவசாயிகளுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை 22[illegible] கூட்டுறவு நிலவள வங்கிகள் அளித்து வருகின்றன.

## உறுப்பினர்களாக ஆக்குதல்

இம்மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் ஏறத்தாழ முக்கால் பங்கு, விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில், 31–5–80-ல் இருந்த நிலவரப்படி சேர்க்கப்பட்டுள்ளது.

அண்மை ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடனளவு குறைந்ததற்கு முக்கிய காரணம்; உறுப்பினர்களின் தவணை தவறிய கடன் தொகை பெருமளவில் அதிகரித்தது ஆகும். 1974—75 லிருந்து 1977—78 வரை மாநிலத்தின் பலபகுதிகளில் வறட்சி அல்லது வெள்ளம் ஏற்பட்டதும், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதை 1977—78-லிருந்து விவசாயிகள் எதிர்த்து வந்ததும், தவணை தவறிய கடன்கள் அதிகரித்ததற்கு காரணங்கள் ஆகும்.

தவணை தவறிய கடன்கள் அதிகரித்துவந்ததால், பல மத்திய கூட்டுறவு வங்கிகள் தாம் மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்து வாங்கிய கடன்களுக்கு ஈடாகப் பிரதம சங்கங்களிடமிருந்து தமக்கு வரவேண்டிய தவணை தவருத கடன்களை வேண்டிய அளவிற்கு ஈடு காண்பிக்க இயலாத நிலை ஏற்பட்டது. இதனல் ரிசர்வ் வங்கியினல் அனுமதிக்கப்பட்ட கடனைப்பெற்று விவசாயிகளுக்கு சாகுபடிச் செலவிற்காகப் புதிய பயிர்க் கடன்களை இம்மத்திய கூட்டுறவு வங்கிகள் வழங்க இயலவில்லை. நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில, தவணை தவறிய கடன்கள் இருந்ததன் காரணமாக ஆறு வங்கிகள் மட்டுமே கடன் வழங்கும் தகுதியை முழுமையாகப் பெற்றிருந்தன 49 வங்கிகள் குறைந்த அளவு கடன் வழங்கும் தகுதியைப் பெற்றிருந்தன; ஏனைய 169 வங்கிகளும் கடன் வழங்கும் தகுதியை இழந்திருந்தன.

## வழங்கிய சலுகைகள்

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராயத் தமிழக அரசால் அமைக்கப்பட்ட ஒரு குழு சில பரிந்துரைகளை வழங்கியது. இவற்றின்படி. கூட்டுறவுக் கடனைப் பெற்றிருந்த விவசாயிகளுக்கு அரசு சில சலுகைகளை 1979-ம் ஆண்டு மே மாதத்தில் அறிவித்தது இச் சலுகைகள், 30-6-1978ல் நிலுவை நின்ற எல்லா தவணை தவறிய விவசாயக் கடன்களுக்கும் 30-6 79 வரை அபராத வட்டியை தள்ளுபடி செய்வது, 1977—78-ல் கட்டப்பட்ட அபராத வட்டியைத் திருப்பித் தருவது, ஏற்கனவே மூன்று அல்லது ஐந்தாண்டுக் கடன்களாக மாற்றப்பட்டு 30-6-78-ல் நிலுவையிலிருந்த கடன்களின்மீது சாதாரண வட்டி தள்ளுபடி செய்வது, அந்த மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்தியகால மாற்றுக் கடன்களின்மேல் வட்டி விகிதத்தை 13 8-லிருந்து சிறு விவசாயிகளுக்கு 10·5 ஆகவும், இதர விவசாயிகளுக்கு 12% ஆகவும் 1-1-79 முதல் குறைத்தது முதனியவாகும் அன்றியும் 30-6-78-ல் நிலுவை நின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மத்திய கால மாற்றுக் கடன்களையும், தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்களையும் ஒருங்கிணைத்து, மேற்கண்டவாறு மூன்று முதல் ஆறு ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தவும், முதல் தவணைத் தொகையை 1979–80-ல் ஆரம்பிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது.

வட்டி சலுகை அளிப்பதற்காக 15 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிக்கும் அரசு வட்டியில்லா முன்பணமாக 16 கோடி ரூபாய் தந்துள்ளது. இது பின்னல் மானியமாக சரிக்கட்டப்பட வேண்டியது. வட்டி சலுகைக்காக மானியம் வழங்குவது கடன்தாரர்கள் தமது பாக்கிக் கடன்களைத் திருப்பி செலுத்துவதைப் பொறுத்தது. இதற்காக கடைசி நாள் 30–9–79 ஆக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர், இக்காலம் 15–1–80 வரை நீடிக்கப்பட்டது. இதன்படி அபராத வட்டிமற்றும் வட்டி மானியமாக 5 07 கோடி ரூபாய், விவசாய சேவைக் கூட்டுறவுச்சங்கங்களிலும், கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் உள்ள கடன் தாரர்களில் 5·19 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டது; கடன்களை ஒருங்கிணைக்கும் சலுகை 61 99 கோடி ரூபா அளவிற்கு. 2·32 இலட்சம் கடன் தாரர்களுக்கு வழங்கப்பட்டது.

மேற்கண்ட சலுகைகளை வழங்கிய பின்னும், தவணை தவறிய கடன்களை வசூலிப்பதில் முன்னேற்றம் தொடர்ந்து குறைவாகவே இருந்தது ரிசர்வ் வங்கி அனுமதித்த கடனைப் பெற்று புதுக் கடன்களை வழங்க ஏதுவாகும் பொருட்டு தவணை தவருத கடன்களை ஈடு கட்டுவதில் உள்ள குறையை நீக்குவதற்காகவும், தவணைத் தேதியில் செலுத்தத் தவறிய தொகையைச் செலுத்துவதற்காகவும் ஒன்பது மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு வழிவகை முன்பணமாக அரசு 37·50 கோடி ரூபாய் அனுமதித்தது. இதில் 20 12 கோடி ரூபாயை எட்டு மத்திய கூட்டுறவு வங்கிகள் பெற்றுப் பயனடைந்தன.

## ரூ. 132 கோடி

1980—81-ல் குறுகிய கால மத்திய காலக் கடன்களை 17[illegible] கோடி ரூபாய் அளவிற்கு வழங்க முதலில் திட்டமிடப்பட்டது ஆனல், உறுப்பினர்களின் தவணை தவறிய கடன்கள் அதிகரித்து, அதனல் கூட்டுறவுச் சங்கங்கள் புதுக் கடன்களை வழங்க இயலாதிருப்பதால, திட்டமிட்ட அளவிற்குக் கடன்கள் வழங்குவது சாத்தியமில்லை. கடன்களை வசூலிப்பதில் 1980–81-ல் கணிசமான முன்னேற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையில், 132 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க தற்பொது திட்டமிடப்பட்டுள்ளது

## நீண்ட காலக் கடன்

நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில், தவணை தவறிய கடன்கள் அதிகமாக இருந்ததின் காரணமாகக் கடன் வழங்கும் தகுதியை இழந்திருந்த 169 வங்கிகளில், 38 வங்கிகளுக்கு அரசு 40·16 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பங்குத் தொகை செலுத்தியது; இதனல் இவ்வங்கிகள் ஓரளவு கடன் வழங்கும் தகுதியைப் பெற்றன. சிறப்புத் திட்ட பகுதிகளில் செயற்படும் கடன் வழங்கும் தகுதியை இழந்த பிரதம நிலவள வங்கிகள் மேற்படி திட்டத்தின்கீழ் சேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதை ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ளது இது, ரிசர்வ் வங்கி விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம் ஏற்கத்தக்க ஒரு மறுசீரமைப்புத் திட்டத்தை அவ்வங்கிகள் செயல்படுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும். அரசு அமைத்த ஒரு செயற்குழு நீண்டகால கூட்டுறவுக் கடன் அமைப்பைப்பற்றிய பல பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான யோசனைக

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுள்ளது)

உங்கள் சகல தேவைகளையும் பூர்த்திசெய்ய
நாடுங்கள் எமது விசேஷ கிளைகளை
(மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்)

சிக்கனமான செலவிற்கும்
தரமான அச்சு வேலைகளுக்கும்
யாழ். கூட்டுறவு அச்சகம்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 363

சுகமான வாழ்வுக்கு சிறந்த வைத்தியம்
யாழ் கூட்டுறவு வைத்தியசாலை
கண்டி வீதி, (சுண்டிக்குளி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 626

சகாய விலையில்
உலோகப் பொருட்கள். மட்பாண்டங்கள்
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

திறமான தேயிலை, கட்டிப்பால்,
தூய்மையான சலவைக்கு
எம்டீஸ் சவர்க்காரம்

குறைந்த செலவில்
அழகான ஆடைகள் அணிய நாடுங்கள்
எமது தையல் நிலையம்

மற்றும் யாவுக்கும் நாடுங்கள்
எமது ஸ்தாபனத்தை
உங்கள் தேவையே எமது சேவை

முகவரி:
74/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 350

(முற்றொடர்)

# தேசீய கூட்டுறவு நிறுவனங்களின் செயற்திறமையை எவ்வாறு மேம்படுத்தலாம்

இலங்கையில் கூட்டுறவு ஆக்க ஆணையாளராகவும், அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் தென்கிழக்காசிய பிரதேச நெறியாளராகவும் முன்னாள் கடமையாற்றிய திரு பி.ஈ.வீரமன் கருத்தரங்கு ஒன்றில் சமர்ப்பித்த கட்டுரையின் தமிழாக்கம்.

### நிதிச்சுதந்திரம்

சட்ட ரீதியான சுதந்திரத்தைவிட நடைமுறைச் சுதந்திரமே செயற்திறமைக்கு முக்கியமானது. தன் காலிலே நிற்க்கூடிய நிலையிலேதான் இது ஏற்படலாம். தனக்கு வேண்டிய நிதிகளுக்கு ஒரு கூட்டுறவு தேசிய நிறுவனம் அரசாங்கத்திலே தங்கியிருக்கவேண்டுமென்றால் அந்நிறுவனம் முன்வைக்கும் ஆலோசனைகளை அரசாங்கம் அதிகம் பொருட்படுத்தும் என எதிர்பார்க்க இயலாது. குறிப்பாக அரசாங்கக் கொள்கையுடன் முரண்படும்போது இது புலனாகும். அரசாங்கக் கொள்கை கூட்டுறவு இயக்கத்திற்குக் குந்தகமாக இருப்பினும் அல்லது உண்மையான கூட்டுறவு அபிவிருத்திக்கு முரணாக இருப்பினும் "நக்குண்டார் நாவிழந்தார்" என்ற அடிப்படையில் அரசாங்கம் கிழித்த கோட்டுக்குள்ளேயே தேசிய கூட்டுறவு நிறுவனம் அடங்கியொடுங்கியுள்ள நிர்ப்பந்தத்திற்குப் பொதுவாக ஆளாகின்றது.

இந்தப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான கூட்டுறவு தேசிய நிறுவனங்கள் தம் சொந்தக் கால்களில் நிற்கக்கூடிய நிதி நிலையில் இல்லை. இந்த விடயத்தில் யப்பான் நாட்டிலுள்ள தேசியகூட்டுறவு நிறுவனங்களை மெச்சாது இருக்க முடியவில்லை. தமக்கு வேண்டிய பணம் முழுவதையும் தமது அங்கத்துவ சங்கங்களிடமிருந்தே அவை திரட்டிக் கொள்கின்றன. எனவே, அரசாங்கத்துடன் சமதையாகப் பேசுவதற்குரிய நிலையில் அவை இருக்கின்றன.

பொருளாதார, சமூக அபிவிருத்திப் பணியில் அரசுடன் சமபங்காளியாகத்தான் ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனம் விரும்பி ஈடுபட வேண்டும், கூட்டுறவு இயக்கத்தின் கருத்துக்களை அவை அரசாங்கத்திற்கு எவ்வளவு கசப்பாக இருப்பினும் சுதந்திரமாக எந்தக் சட்டத்திலும் வெளியிடுவதற்கு நிர்வல்லமை பொருந்தியவர்களாக தேசிய கூட்டுறவு நிறுவனங்கள் இருத்தல் வேண்டும்.

இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளிலே நிதி திரட்டும் பொருட்டு சட்டம் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் ஆதாயத்திலிருந்து குறிப்பிட்ட ஒரு வீதம் அறவிடப்படுகின்றது. இது உண்மையில் கூட்டுறவுச் சங்கங்கள் மீது விதிக்கப்படும் ஒரு வரி எனலாம். இது கூட்டுறவுக் கொள்கைகளுக்கு ஒவ்வாதது. ஒரு தேசிய கூட்டுறவு நிறுவனத்தினால் அல்லது அதற்காக திரட்டப்படும் நிதி கூட்டுறவுச் சங்கங்களினால் விரும்பிக் கொடுக்கப்பட்ட ஒன்றாய் இருத்தல் வேண்டும். வலுக்கட்டாயமான அறவீட்டின் மூலம் பணம் பெறுபவருக்கும் பணம் கொடுப்பவருக்குமிடையே—பணம் பெறுபவர் பதிவு காரியஸ்தராக இருந்தாலென்ன தேசிய கூட்டுறவு நிறுவனமாக இருந்தாலென்ன — ஒரு வகைஇடைவெளி, புறத்தியான் உணர்வு ஏற்படுகின்றது.

ஓர் உபவிதிக்கு அமைவாக தேசிய கூட்டுறவு நிறுவனத்திற்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் ஒழுங்காகப் பணம் செலுத்துவதாய் இருந்தால் அது தன்னைத் தானே கட்டுப்படுத்தும் ஒரு விதியாகவே இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஒத்துழைத்தல் என்ற கூட்டுறவுக் கொள்கைக்கு அமைவாக இருக்கும். அத்துடன் அறவொழுக்கம் பெறுமதி மிக்கதாயும் இது விளங்கும்

(வளரும்)

(முற்றொடர்)

# கூட்டுறவு ஆசிரியர்களுக்கான வெளிக்களப் பயிற்சித் (அனுபவம்) திட்டம்

திரு. தமன் பிரகாசும் திரு. முதியான்சேயும் யாழ் மாவட்டத்திற்கு மே மாதத்தில் விஜயம் செய்து சுவீகாரம் எடுக்கப்பட்ட சங்கமான வலி கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தைப் பார்வையிட்டனர்.

சங்கம் நெறியாளர் குழுவின் விசேட கூட்டம் ஒன்றினைக்கூட்டி முழுநேர கூட்டுறவுக் கல்லூரி உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பது பற்றியும் உறுப்பினர் கல்வித் திட்டத்தையும், உள்துறைப் பயிற்சித் திட்டத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய கொள்கையை வரையறுப்பது பற்றியும் ஆராய்ந்தது. வெளிக்களப் பயிற்சித் திட்டத்திலும், சங்கப் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதிலும் சங்கம் காட்டும் ஆர்வத்தினை இது புலப்படுத்துகின்றது.

வெளிக்களப் பயிற்சி அனுபவத் திட்டத்தின் நோக்கங்கள்பற்றி கூட்டத்திற்கு அறிவிக்கப்பட்டதோடு சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தரான திரு பத்திநாதன் வழங்கக்கூடிய உதவி பற்றியும் தெரிவிக்கப்பட்டது. சங்கத்தினைப் பயிற்சித் திட்டம் சுவீகாரம் எடுத்த போதிலும் நிதியுதவி எதுவும் வழங்கப்படமாட்டாது எனவும் தமன் பிரகாஷ் விளக்கினார். சங்கமே எல்லாச் செலவுகளையும் ஏற்கவேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டது. தொழில் நுட்ப உதவியையே பயிற்சித்திட்டம் வழங்கும் என்று எடுத்துரைக்கப்பட்டது. திரு. பத்திநாதனது உதவியோடு சங்கப் பணியாளர்களது பயிற்சித் தேவைகள் இனங் கண்டு கொள்ளப்படும் என்றும் இவற்றிற்கு ஏற்ப ஒரு பயிற்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு சங்கத்தின் கல்வி உத்தியோகத்தருக்கு உதவியளிக்கப்படும் என்றும் இவ்வாறு தயாரிக்கப்பட்ட பயிற்சித் திட்டம் நெறியாளர் குழுவின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாலோசனைகளை ஏற்றுக்கொண்ட சங்கம் இப்பொழுது சங்கத்தின் கடன் வசதி சந்தைப்படுத்தல் முகாமையாளராக கடமையாற்றும் திரு. சிவசுப்பிரமணிய ஐயரை முழுநேர சங்கக் கல்வி உத்தியோகத்தராக விடுவது எனத்தீர்மானித்தது.

வெளிக்களப்பயிற்சி அனுபவத்திட்டம் ஆசிரியர்களுக்கும், சங்கங்களுக்கும் கணிசமான நன்மைகளை அளிக்கவல்லது. ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் வேறுவகை அனுபவங்களை அவர்கள் பெறக்கூடியதாக இருக்கிறது. (மனிதத் தொடர்பு, வேலை ஆய்வு, உள்துறைப் பயிற்சி, மதிப்பீடு, கூட்டங்களை நடாத்துதல், முகாமையோடு தொடர்பு கொள்ளல்) ஆசிரியர்களும் சங்கங்களும் தத்தமது அனுபவங்களைப் பரிமாறுவதன் மூலம் பரஸ்பர நன்மை அடையலாம். இந்தப் பயிற்சித் திட்டம் வெற்றிபெறவேண்டுமானால் ஆசிரியர்கள் தமக்குள்ளே கலந்துரையாடுவதோடு தேசிய கூட்டுறவுச் சபையினதும் கூட்டுறவுத் திணைக்களத்தினதும், உத்தியோகத்தருடன் ஒழுங்காகக் கலந்துரையாடல் வேண்டும்.

(முற்றும்)

# கூட்டுறவுப் பயிற்சிக் கல்விமுறை மீளமைக்கப்பட வேண்டும்

இன்று நடைமுறையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி கல்விமுறை அடியோடு மாற்றியமைக்கப்படவேண்டுமென அண்மையில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் தகவுரை செய்யப்பட்டது.

தேசிய கூட்டுறவுச் சபையினதும் அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தினதும் ஆதரவோடும் ஒத்துழைப்போடும் நடைபெற்ற இக்கருத்தரங்கினை இலங்கைக் கூட்டுறவு ஆசிரியர்களுக்கான பயிற்சி செயற்திட்டம் ஒழுங்கு செய்திருந்தது.

கூட்டுறவு ஊழியர்கள் பயிற்றப்படுவதன் அவசியத்தினை வற்புறுத்திய இக்கருத்தரங்கு பயிற்சி முறை தொழில் சார்ந்ததாய் இருக்க வேண்டுமென சுட்டிக்காட்டிற்று.

கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களுக்கு பயிற்சியளிக்கப்பட வேண்டுமென்று கல்வி பயிற்சித் திட்டத்தினை மேற்பார்வை செய்வதற்கு உத்தியோகப் பற்றற்ற உயர்மட்ட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட வேண்டுமென்று தகவுரை செய்யப்பட்டது.

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் தனக்கென தேசிய கூட்டுறவு முகாமைப் பயிற்சி நிறுவனம் ஒன்றினை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் இக்கருத்தரங்கிலே கருத்து தெரிவிக்கப்பட்டது.

# கல்வி முன்னோடிகளான 19ம் நூற்றாண்டுக் கூட்டுறவாளர் இலங்கசயர் அனுபவம்

நிகல் ரொட்

பிரித்தானியாவிலே பொது மக்கள் சார்ந்த கல்வி முறை உருப் பறறு வளர்ச்சியுற்ற காலகட்டத்தில் பவலையாளர் கூட்டுறவு இயக்கம் அத்துறையிலே ஆற்றிய பங்களிப்பு பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது. உள்ளூரிலே அமைந்திருந்த சில்லறை வியாபாரக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு காலத்திலே வழங்கிவந்த கல்விச் சேவைகள் பெரும்பாலும் அடிக்குறிப்புகளாகவோ, ஓரிரண்டு பந்திகளாகவோ மட்டுமே கல்வி வரலாற்று நூல்களில் இடம் பெறுதல் வழக்கமாகியுள்ளது. (இன்று இத்தகைய உதாசீனத்திற்குச் சவால்விடும் பாங்கில் சில அண்மைக்கால நூல்கள் அமைகின்றன. பிரித்தானிய கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுள்ள புதிய அக்கறையின் விளைவு இது

19 ம் நூற்றாண்டின் பெரும் பகுதியிலே கூட்டுறவாளர்கள் கல்விக்கு ஆக்கபூர்வமான முறையில் தொண்டாற்றினர். பொதுத்துறை கல்வி வசதிகளை விசாலிக்க வேண்டுமென அவர்கள் அரச அதிகாரிகளிடம் வறபுறுத்தியதோடு அமையாது சொந்தமாக கல்விப் பின்னல் அமைப்பினை உருவாக்க முன் வந்தனர். இந்தக் கால கட்டததிலே கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுந்தான் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்ட தன்விருப்பார்ந்த நிறுவனங்கள் எனக் கூறுவதற்கில்லை. ஆனால் கூட்டுறவு இயக்கம் அக்கட்டத்திலே வழங்கிய கல்விச் சேவை பொதுவாகக் குறைத்து மதிப்பிடப்படுகின்றது.

கூட்டுறவின் தொட்டிலான இலங்காசயரில் கூட்டுறவுக் கல்வி குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியுற்றிருந்தது. 1871-72ல் கல்வி நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கியிருந்த மொத்தக் கூட்டுறவுச் சங்கங்களில் $\frac{1}{8}$ பகுதி இலங்கசயரில் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. காலத்தால் முந்திய இலங்காசயர் கூட்டுறவின் கல்வித் தொண்டினை ஆராய்வது மிக முக்கியமாகும். ஏனெனில் அந்தப் பகுதியிலே கல்விக்கான கூட்டுறவு ஏறபாடு மிகப்பரந்துபட்டு இருந்தது மல்ல, ஏனையோர் பின்பற்றும் முன்மாதிரியாகவும் இலங்காசயர் அமைந்தமையால்.

இலங்காசயர் கூட்டுறவாளர்கள் முன்னோடிகளாக விளங்கி கல்வித்துறையிலே பெற்ற அனுபவத்தின் அடித்தளத்திலே தான் ஏனைய பிரித்தானிய கூட்டுறவுச் சங்கங்கள் தமது சேவைகளைக் கட்டியெழுப்பின. இலங்காசயரில் சமூக, பொதுச் சேவைகள் வளர்ச்சியுறாத நிலையிலிருந்த ஒரு கட்டத்திலேதான் இலங்காசயர் கூட்டுறவாளர் இக்களத்திலே இறங்கியமையால் ஈற்றிலே இலங்காசயர் அனுபவம் உலகத்தின் கவனத்தையும், பொதுமையையும் பெற்றது.

(வளரும்)

---

# பல்தேச வணிக கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவுக் கொள்கைகளும்

போல் டெறிக்

## கூட்டுறவுப் பங்களிப்பு

1973 லும், 1974 லும் பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்கள் பற்றி வெளியிடப்பட்ட அறிக்கைகள் சொத்துரிமை, கட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகளை ஆராய்ந்தன. 1973ல் வெளியிடப்பட்ட அறிக்கை சொத்துரிமை புதிய வடிவங்களை எடுக்கும் என்றும் உள்ளூர் கட்டுப்பாடு அதிகரிக்கும் என்றும் கூறிற்று. 1974ல் வெளியிடப்பட்ட அறிக்கை மூலதனமும் ஆதாயமும் நாட்டிற்கு வெளியே எடுத்துச் செல்லப்படல் மட்டுப்படுத்தப் படலாம் எனக் கூறிற்று.

டது. வளர்முக நாடுகளிலே பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்களின் முதலீடு பற்றி ஆராய்கையில் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டது:

ளூர்க் கிளைகள் தாய்க் கம்பனிகளான பல்தேச வணிகக் கூட்டுத் தாபனங்களுக்கு மட்டுப்படுத்தப்படாத வட்டி செலுத்தலாம் என விதிக்கலாம் இந்தக் கால எல்லை முடிந்ததும் பங்கு முதலில் கொடுக்கப் படும் வட்டி வீதம் மட்டுப்படுத் தப்படும். ஒரு புரட்சிகர அரசாங்கம் எதேச்சாதிகாரமாக சொத்தைப் பறிமுதல் செய்யும் ஆபத்தைவிட இது செலவுச் சுருக்கமான வழியாகவும் இருப்பதால் அதேசமயம் பல்தேச வணிக கூட்டுத்தாபனத்தின் நோக்கிலும் மூலதனத்திற்கு வழங்கப் படும் வட்டி வீதம் மட்டுப் படுத்தப்பட்டதாய் இருப்பினும் கணிசமானதாய் இருக்கலாம்.

துவது தேசியமயமாக்கலையும், உள்ளூர் பங்குதாரர் முறையையும் விடச் செலவுச் சுருக்கமானது மட்டுமல்ல பெருமானத்தையும் பலத்தையும் பரவலாக்குவதற்கு வழி சமைக்கும்.

இத்தகைய சூழ்நிலையில் பல்தேச வணிகக் கூட்டுத் தாபனங்கள் முதலீடு செய்வதை வளர்முக நாடுகள் வரவேற்கும். ஏனெனில் ஆறுயிலே இவ் வளர்சிப் போக்கு உள்ளூர் மக்களுக்கு அனுகூலமாய் இருக்கும் என்பதால். ஏதச்சாதிக்கார சொத்துப் பறிமுதல் ஆபத்துக்கள் குறைக்கப்படுவதால் வளர்முக நாடுகளிலே முதலீடு செய்வதற்கு பல்தேச வணிக கூட்டுத்தாபனங்களும் ஆயத்தமாக இருக்கலாம்.

இவற்றிலிருந்து பல்தேச வணிகக் கூட்டுத் தாபனங்களின் பலத்தாலும் செல்வத்தாலும் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் கூட்டுறவுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு தெளிவாகின்றது. பங்கு முதலில் கொடுக்கப்படும் வட்டி வீதம் கண்டிப்பாக மட்டுப்படுத்தப்பட்டதாய் இருத்தல் வேண்டும் என்ற கூட்டுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்தால் பல்தேச வணிகக் கூட்டுத் தாபனங்களும், அவற்றின் கிளைகளும் கூட்டுறவுமார்க்கத்திலே செல்வதற்கு வழி பிறக்கும்.

இந்தமார்க்கத்தின் சாத்தியப்பாடுகளைப் பற்றி 1972ல் கூடிய அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தினத்தின் 25வது மகாநாட்டிலே ஆராயப்பட்

'அன்னிய மூலதனத்தின் ஆதிக்கத்தை வளர்முக நாடுகளின் அரசாங்கங்களும் மக்களும் வெறுக்கின்றனர். அதேசமயம் அவர்களுக்கு அன்னிய மூலதனம் தேவைப்படுகின்றது அதனைக் கவர்ந்து ஈர்ப்பதற்கு அவர்கள் அடிக்கடி விசேட நடவடிக்கைகளை மேற் கொள்கின்றனர். வளர்முக நாடுகளுக்குத் தேவைப்படும் மூலதனத்தை பல்தேச வணிக கூட்டுத்தாபனங்கள் வழங்க வல்லன. இந்த மூலதனத்தை அனுகூலமான முறையில் வழங்குவதற்கு கூட்டுறவுக் கொள்கைகள் வழி வகுக்க முடியுமா? எடுத்துக்காட்டாக வளர்முக நாடுகளின் கம்பெனிச் சட்டத்தை மாற்றுவதன் மூலம் குறிப்பிட்ட கால எல்லைக்கு மட்டுந்தான்—ஐந்து அல்லது பத்து ஆண்டுகள்—உள்

காரமாக சொத்தைப் பறிமுதல் செய்யும் ஆபத்தை இத்தகைய ஏற்பாடு குறைப்பதால் பல்தேச வணிக கூட்டுத்தாபனங்கள் இதனை ஏற்பதற்குத் தயாராக இருக்கலாம்.''

ஆரம்பத்திலிருந்தே பங்கு முதலில் கொடுக்கப்படக்கூடிய வட்டியை மட்டுப் படுத்துவதற்கு ஏற்பாடு செய்வது தேசிய மயமாக்கலால் எழக்கூடிய நட்டஈட்டுப் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு ஏதுவாகும். உள்ளூர்க்கிளைகள் இறுதியிலே தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனங்களாக மாறி கூட்டுறவு அடிப்படையில் அமைவது உள்ளூர் அரசாங்கங்களுக்கும் ஏற்புடைத்தாய் இருக்கும். ஏனெனில் தேசிய மயமாக்

பல்நேச வணிகக்கூட்டுத் தாபனங்களின் கிளைகள், குறிப்பாக வளர்முக நாடுகளிலே! ஆனால் அங்குமட்டுமல்ல) கூட்டுறவு பார்க்கத்தில் பரிணும வளர்ச்சி எய்

(வளரும்)

---

# பொதுக் கூட்டம் ஒத்திவைப்பு

ஆகஸ்ட் 20ந் திகதி நடைபெறவிருந்த யாழ் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 23 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டது.

மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு கடமை நேரத்தில் கடமை இடங்களிலிருந்து வெளியில் செல்ல அனுமதி வழங்கவோ அல்லது லீவு வழங்கவோ முடியாது என்று யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகர் தெரிவித்ததையொட்டியே இக்கூட்டம் மேற்கண்டவாறு ஒத்திவைக்கப்பட்டது.

இக்கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென 11-8-80-ல் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் நிருவாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(முற்றொடர்)

# கூட்டுறவு இயக்கத்தின் தனிப்பண்பு

பேராசிரியர் ஜோர்ஜ் லசேரி
பாரிஷ் பல்கலைக்கழகம்

**கூட்டுறவு இயக்கத்தின் வீழ்ச்சி புறக்காரணங்கள்**

இன்றைய காலகட்டத்தில் கூட்டுறவு உணர்வு குன்றிக்காணப்படுகின்றது. கடந்த 25 ஆண்டுகளிலே முதலாளித்துவ அமைப்பு வாழ்க்கைத் தரத்கனை மேம்படுத்தியிருப்பதால் தொழில்மய நாடுகளிலே கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குச் சூழ்நிலை அவ்வளவு சாதகமாக இல்லை.

முதலாளித்துவம் கையாண்டுள்ள புதிய உத்திகளால் இது சாத்தியமாயிற்று. போட்டியின் விளைவாக இவ்வுத்திகளை கூட்டுறவு இயக்கமும் மேற்கொள்ளவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்தும் தோழமை உணர்வை விஞ்ஞான ரீதியான தொழிலமைப்பும் இயந்திரமயமாக்கலும் அரித்து விடுகின்றன, தற்தொண்டு பாங்கில் அமைந்துள்ள பிரமாண்டமான நிறுவனங்கள் தாம் ஒரு சங்கத்தின் உறுப்பினர்கள் என்ற உணர்வை பாவனையாளர்களுக்கு ஊட்டும் மனித தொடர்புகளை அருகச் செய்கின்றன. தமது போட்டியாளர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியும், தமது கொள்கைகளுக்கு முரணாகவு கூட்டுறவுச் சங்கங்கள் பல தடவைகளிலே தமது உறுப்பினர்களை கைவிட்டுள்ளன. ஏனென்றால் அவர்களால் அதிகம் ஆதாயம் ஏற்படாததால்தான். எடுத்துக்காட்டாக வாகன வசதியற்ற குறைந்த வருமானத்தைப் பெறும் பாவனையாளர், கடன்களை அடைக்காத வாடிக்கையாளர், தொலைவில் வாழும் அல்லது குறைந்த தொகைப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் சிறு விவசாயிகள் ஆகியோர் இவ்வாறு அனுதரவாக விடப்பட்டுள்ளனர்.

நவீன முறைகளின் உயர்ந்த ஆக்கத்திறமையின் பயனாக முதலாளித்துவ முயற்சி கூட்டுறவுச் சங்கங்களையும் விட நல்ல விலைகளை வழங்க ஏதுவாய் இருக்கின்றது கூட்டுறவுச் சங்கங்கள் தமது ஆதாயத்தைத் உறுப்பினர்களிடையே பங்கிடுகின்றன என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும் முன்பு போல் கூட்டுறவுச் சங்கங்களை நாடவேண்டிய தேவை இன்று இல்லை.

கடும் போட்டியின் விளைவாக சில கூட்டுறவுச் சங்கங்கள் மடிந்து விட்டன. ஒல்லாந்தர் பாவனையாளர் இயக்கத்தின் பெரும் பகுதிக்கு இக்கதி ஒரேயடியாக நேர்ந்துள்ளது வேறு சில சங்கங்கள் முதலாளித்துவ முயற்சிகளோடு உடன்படிக்கைகள் மூலம் இணைந்துள்ளன. இவ்வுடன்படிக்கைகள் பெரும் ஆபத்தாக மாறலாம். வேறு சில சங்கங்கள் பங்கு வட்டி வழங்குவதை கைவிட்டு விட்டன.

**அகக்காரணங்கள்**

கூட்டுறவு இயக்கத்தின் இந்த நலிவுக்கு அகக்காரணங்களும் உள. பாவனையாளர் சமுதாயத்தில் வாழும் எமது ஆண்களும் பெண்களும் விளம்பரத்தின் பசப்பினால் பதப்படுத்தப்பட்டு தன்னலப்பாங்கு மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். பாரிய கட்டமைப்பாடுகளும், பொறுப்புக்களும் மிக்க ஒரு சங்கம் அவர்களைக் கவரத்தவறுகின்றது கொலைக்காட்சி அவர்களை இல்லத்திலிருந்து வெளியேற விடுவதில்லை இதனால் கூட்டங்கள் கூடுவது கடினமாகின்றது சமுதாய வாழ்வு பாதிக்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களின் அளவும் பெரிதாகிக் கொண்டு வருவதனாலும் மத்திய நிறுவனங்களுக்கு அவை கீழ்ப்படிந்து வருவதனாலும் குடியாட்சிப் பண்பு சிதைந்து வருகின்றது

ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கும் தொடர்ந்து அதற்கு விசுவாசமாக இருப்பதற்கும் முக்கிய காரணமாக இருந்தது ஆதாயப் பங்கே. இதுவே கூட்டுறவு இயக்கம் முதலாளித்துவ முயற்சியிலும் பார்க்க மேம்பட்டது என்பதற்குச் சான்றாகும். ஆதாயப்பங்கு குறைக்கப்பட்டால் அல்லது அறவே ஒழிக்கப்பட்டால் அது உறுப்பினர்களின் நிலையைத் தாழ்த்துவதோடு அவர்களின் உளப்பாங்கையும் பாதிக்கின்றது வெறுமனே வாடிக்கையாளராகவோ பணியாளராகவோ அல்லது வழங்குனராகவோ அவர்கள் தாழ்ந்து விடுகின்றனர்.

சங்கங்களின் தோற்றம் மட்டுமல்ல அவற்றின் இயங்கு முறையும் ஏனைய முயற்சிகளிலிருந்து அதிகம் வேறுபடாததினால் கூட்டுறவுச் சங்கங்கள் ஏனைய முயற்சிகளிலிருந்து வேறுபட்டவை என்ற உணர்வு மழுங்க அடிக்கப்படுகின்றது.

மனிதனால் உருவாக்கப்பட்ட எல்லா நிறுவனங்களிலும் காணப்படும் ஓர் உளவியல் மாற்றத்தை கூட்டுறவு இயக்கத்திலும் அவதானிக்கலாம். ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவுபவர்கள் ஆர்வத்தோடு உழைக்கின்றனர். ஒன்றைப்படைத்து கட்டியெழுப்பும் மகிழ்ச்சி அவர்களை உந்துகின்றது. ஆனால் இரண்டாவது தலைமுறையும் பின்னர் வரும் தலைமுறைகளும் ஏற்கெனவே தயாரித்து அளிக்கப்பட்ட ஒன்றைக் கையேற்பதால் அதை அவ்வளவு இலட்சியப்படுத்துவதில்லை. முகாமையும் நிருவாகமும் படைத்தலைப் போன்று கவரவல்லன அல்ல.

எந்தக் குறிக்கோளுக்காக ஒரு நிறுவனம் உருவாக்கப்படுகின்றதோ, அது துணிச்சல் மிக்க ஒன்றாய் அறவொழுக்கப் பெறுமதி மிக்கதாய் இருக்கலாம். எனினும் அக்குறிக்கோளை எய்துவதற்கு எத்தனையோ இடைக்கட்டங்களைத் தாண்ட வேண்டும் பல தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். செயல் வேகத்திலே ஒருவர் தொழில் பாட்டிலே முழுக்க முழுக்க அமிழ்ந்து இறுதிக்குறிக்கோளை அலட்சியப்படுத்தவும் தலைப்படலாம் இடைப்பட்ட நோக்கங்களும், நிறுவன அமைப்பும் இறுதிக் குறிக்கோளை விடப் பிரமாண்டமானவையாய்த் தோன்றலாம் அவற்றைப்பாதுகாத்துப் பலப்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# கிராம அபிவிருத்தியில் மக்கள்: பங்குபற்றுதல்

கொன்ரூட் வேர்காமென்

**அறிமுகம்**

பங்குபற்றுதல் என்பது பின்னிப் பிணைந்த செயற்பாட்டினதும், தொடர்பு கொள்ளலினதும் விசேட வடிவமாகும் அதிகாரங்களும் பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்படல் இதன் தாற்பரியமாகும். விளைபயனை ஏற்படுத்தவேண்டுமென்றால் பங்குபற்றுதலுக்கு நிறுவன வாய்க்கால்கள் தேவைப்படுகின்றன. அதாவது வளர்முக நாடுகளைப்பொறுத்தவரை உள்ளூர் அமைப்புக்கள்.

கிராம அபிவிருத்தி பற்றி அண்மைக்காலத்திலே வெளிவந்துள்ள நூல்களும் கொள்கைப் பிரகடனங்களும் புதிய அணுகுமுறைகளின் இன்றியமையாமையை வற்புறுத்தி வருகின்றன. நன்மைபெறவிருப்பவர்களின் பங்குபற்றுதல் மட்டம் உயரவேண்டும் என்பதை அழுத்தி இதனை அடித்தளமாக இவ்வணுகுமுறைகள் கொண்டிருக்கின்றன. திட்டங்களை வகுத்தல், அவற்றினைச் செயற்படுத்திக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் செம்மைகள் யல்லாக்கத்தோடு கலந்து கொள்கின்றனர் என்பதனைப் பங்குபற்றுதல் என்ற பதம் குறிக்கும். வேறு ஆட்களால் முன் நிர்ணயிக்கப்பட்ட பணிகளில் இவர்கள் மந்தைகள்போல் ஈடுபடுதலையோ அல்லது தொழில் செலவுகளைக் குறைக்கும் பொருட்டு மக்களைச் சரண்டுதலையோ இது குறிக்காது. நன்மை பெறவிருப்பவர்களின் நலன்கள் கணக்கில் எடுக்கப்படுவதைப் பங்கு பற்றுதல் உத்தரவாதப் படுத்துகின்றது என மேலும் வாதிடப்படுகின்றது மக்கள் பங்கு கொள்வதன் விளைவாக அபிவிருத்தித் தேவைகள் பூர்த்தியாக்கப் படுவதும் நன்மைகள் எல்லோருக்கும் சமமாகச் சுவறுவதும் கூடுதலாகச் சாத்தியமாகின்றது. அடிப்படைத் தேவைகள் சார்ந்த கோட்பாட்டில் மக்கள் பங்குபற்றுதல் இன்றியமையாத கூறாகக் கணிக்கப்படுகின்றது. தம்மைப் பாதிக்கும் முடிவுகளை மக்கள் தாம விரும்பும் அமைப்புக்களினூடாகவே எடுத்தல் வேண்டும் என்பதே இன்று பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையாகும்

> **உள்ளூர் நிறுவனங்கள் மூலம் எவ்வாறு இதனை ஊக்குவிக்கலாம்.**

மக்கள் ஏன் பங்கு பற்ற வேண்டும் என்பது சர்ச்சைக்கு அப்பால்பட்டு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. எவ்வாறு பங்குபற்றுவது என்பதுதான் இன்றும் செம்மையாக ஆராயப்படாத பிரச்சினையாக இருக்கின்றது. வளர்முக நாடுகளின் கிராமப்புறங்களிலே நிலவும் சூழ்நிலைகளிலே உள்ளூர் அமைப்புக்கள் தோன்றி நிலைபெறுவதற்கு கையாளப்பட வேண்டிய உத்திகள் எவை? உள்ளூர் அமைப்புக்கள் என்னும்போது செல்சார்ந்த குறிக்கோள்களையுடைய குழுக்களைக் குறிக்கும். இவை கூடிச் சேருதலிலிருந்து தோன்றி திட்டவட்டமான உறுப்புரிமையும், பங்குபற்றுதல் தன்மையும் வாய்ந்த குழுக்களாகும்

உள்ளூர் அமைப்புக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து நாம் வேறுபடுத்தவேண்டும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளூர்க் கொள்கைகளை வகுத்து அபிவிருத்தி முன்னுரிமை ஒழுங்கைவரையறுத்து நிருவாகத்தில் ஈடுபடுகின்றன. இவையே அவற்றின் தலையாய பணிகள். ஆனால் சில இடங்களிலே செயல் சார்ந்த உள்ளூர் அமைப்புக்களும், உள்ளூராட்சி நிறுவனங்களும் பிரிக்க முடியாதவாறு இணைந்திருப்பதை நாம் காணலாம். எடுத்துக்காட்டாகத் தன்சேனியாவில் கிராம அலகு உள்ளூராட்சி நிறுவனமாகவும், ப.நோ. சங்கமாகவும் இயங்கி வருகின்றது. இதை யொத்த நிறுவன ஏற்பாடுகளையே மொசாம்பிக் மலகாசி குடியரசு ஆகிய நாடுகளிலும் நாம் காணலாம்.

இந்தக் கட்டுரையிலே உள்ளூராட்சி நிறுவனங்களையோ, அரசியல் கட்சிகளின் உள்ளூர் கிளைகளையோ நான் கணக்கில் எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். பிரதானமாக பொருளாதாரக் குறிக்கோள்களைக் கொண்ட செயல் நோக்கம் சார்ந்த உள்ளூர் குழுக்களே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்பத்திலேயே இன்னொரு எச்சரிக்கையையும் விடுத்தாக வேண்டும். உள்ளூர் அமைப்புக்களிலே மக்கள் பங்குபற்றுதலின் மூலம் எத்தனையோ நன்மைகள் ஏற்படுவது சாத்தியமாயினும் உற்பத்திக்குத் தேவையான வள ஆதாரங்களையும் செல்வத்தையும் (நிலம் நீர் மறுபங்கீடு செய்வதற்கு வேண்டிய சீர்திருத்தங்களுக்குப் பதிலாக இந்த அபிவிருத்தி உத்தியைக் கையாள முடியாது.

(வளரும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

# கொள்கை....

னைத் தெரிவித்துள்ளது. வரும் மாதங்களில் தவணை கடந்த கடன்கள் பற்றிய நிலையில் முன்னேற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையில், 1980–81-ல் 17 கோடி ரூபாய் அளவிற்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## சிறு பாசனம்

சிறு பாசனத் திட்டங்களுக்குக் கடன்கள் வழங்குவதற்கான வாய்ப்புகள் குறைந்து வருவதால் நிலவள வங்கிகள், வணிகப் பயிர்களான தென்னை, முந்திரி, காப்பி மற்றும் ஏனைய தோட்டப்பயிர்களின் சாகுபடி, பட்டுப்புழு வளர்த்தல், டிராக்டர் மற்றும் இயந்திரக் கலப்பைகள் வாங்குதல், பண்ணை வீடுகள் மற்றும் கால்நடைக் கொட்டகைகள் அமைத்தல், பால்பண்ணைத் திட்டம். கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற இதர நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்கவும், மின்வாரியம் மீன்வளக் கழகம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்குக் கடன் கொடுக்கவும் முயற்சி செய்து வருகின்றன

## விவசாய மறுநிதி

1968–69-ஆம் ஆண்டிலிருந்து விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதின் மூலம், விவசாய வளர்ச்சிக்குக் கடன் வழங்குவதற்காக பகுதிவாரியான வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 43 93 கோடி ரூபாய் செலவிலான 85 சிறுபாசனத் திட்டங்களும், 15·29 கோடி ரூபாய் செலவிலான 65 சிறுபாசனமில்லாத பிற திட்டங்களும் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 6,937 நீர் இறைக்கும் மின் இணைப்பு கொடுப்பதற்காக மாநில நிலவள வங்கி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு 1976–77-லிருந்து இதுவரை 2·29 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

## நலிந்த பிரிவினர்

விவசாயிகளில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குவதில தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிமுறையின்படி மொத்தக் கடன் தொகையில் 20 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் தமிழகத்திலுள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1979–80-ல் நலிந்த பிரிவினர்களுக்கு, அதாவது சொந்தமாகவோ அல்லது த்தகைக்கோ ஐந்து ஏக்கருக்கும் குறைவாக சாகுப செய்பவர்களுக்கு, 49 சதவீதம், அதாவது 20 87 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளன. 1980–81-ஆம் ஆண்டு இறுதிக்குள் இதை 56 சத வீதத்திற்கு உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. நீண்டகாலக் கடன்களில் 9 சதவீதம் அதாவது 2 57 கோடி ரூபாய் 1979–80-ல் சிறு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது இதை 50 சதவீதத்திற்கு உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அரசு மூலதனம்

கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு கடன் பெறுவதற்கு தகுதி உடையனவாக இருப்பதற்காக இவற்றின் பங்கு மூலதனத்தில் அரசும் முதலீடு செய்து வருகிறது. நிலவள வங்கிகள். நகர வங்கிகள் உட்பட இக்கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு 31-3-1980 அன்று 28 கோடி ரூபாயாக இருந்தது. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து உதவி பெற்று 1980–81-லும் அரசு இச் சங்கங்களில் முதலீடு செய்யும்,

## புதிய கிணறுகள்

புதிய கிணறு வெட்டுவதற்காகும் செலவில் 25 சதவீதம் அல்லது 500 ருபாய் இதில் எது குறைவானதோ அத்தொகையை மானியமாக பிரதம நிலவள வங்கிகள் மூலம் சிறு விவசாயிகளுக்கு அரசு வழங்கி வருகிறது 1979–80-ல் 1,004 சிறு விவசாயிகளுக்கு 5 லட்சம் ரூபாய் புதுக்கிணறு மானியமாக வழங்கப்பட்டது. மேலும் 1,000 சிறு விவசாயிகளுக்கு, கிணறு ஒன்றுக்கு 500 ரூபாய்வீதம் மானியம் வழங்க, 1980–81-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திலும் 5 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது பழங்குடியினருக்குக் கிணறு வெட்டும் செலவில் 50 சதவீதம், கிணறு ஒன்றுக்கு 3 500 ரூபாய்க்கு மேற்படாமல் மானியமாக வழங்கப்படுகிறது 1979–80-ல் 51 பழங்குடியினருக்கு 1·[illegible]8 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

## விவசாயிகள் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்

மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள 26 விவசாயிகள் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சாகுபடிக்காகவும், துணைத் தொழில்களுக்காகவும் கடன்கள் வழங்குவதல்லாமல், பயிர்பாதுகாப்பு, மண்வளம்நீர் நிலைமைபற்றி சோதனை செய்தல், மாதிரிப் பண்ணைகள் அமைத்தல் போன்ற பணிகளைச் செய்வதோடு, பால் பண்ணை அமைத்தல், டயர் வண்டி தயாரித்தல் கோழிப்பண்ணை நடத்துதல், பட்டுப்புழுவளர்த்தல், விவசாயப் பட்டரை அமைத்தல், மணிலா, பருத்தி, மற்றும் பருத்தி விதை விற்பனை செய்தல், விவசாய கழிவுப் பொருள்களிலிருந்து காகிதம் தயாரித்தல் போன்ற பல்திறப்பட்ட நடவடிக்கைகளுக்கான தனித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகின்றன.

விவசாயிகள் தம் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு. அவர்களுக்கு. அவர்களது பொருட்களின் ஈட்டின் பேரில், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், கடன்களை வழங்கி வருகின்றன.

## ஒருங்கிணைந்த திட்டம்

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஒரு கோடி ரூபா அளவிற்கு விற்று முதல் செய்ய ஏதுவாகும் பொருட்டு, ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன்கீழ் ஆறுவது திட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் ஐந்து சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் ஒவ்வொன்றுக்கும் கீழ்க்கண்டவாறு நிதிஉதவி தரப்படும்:

(1) விற்பனைக்களம் கட்ட (40.60 விகிதத்தில்) மானியமும் கடனுமாக 2 இலட்சம் ரூபாய்;

(2) லாரி வாங்க மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காகத் தொடக்க நிலை உதவித் தொகையாக மானியம் 25,000 ரூபாய்.

(3) தரம் பிரிக்கும் கருவிகள் வாங்க மானியம் 10,000 ரூபாய்.

(வளரும்)

---

# சுவடுகள்

— கரகரப்பிரியா —

## கூட்டுறவும் சஞ்சய் காந்தியும் ★

சஞ்சய் காந்தியுடன் விமான விபத்தில் உயிரிழந்த விமானி கப்ரின் சக்சேனா "வேலையில்லாத விமான ஓட்டிகள் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தியவர். இதற்கு சஞ்சய் காந்தி பெரிதும் ஊக்கமளித்து உதவியுள்ளார்.

கப்ரின் சக்சேனா ஆந்திர மாநில பறக்கும் சங்கத்தில் 28-10-1970 வரை பயிற்சி அளிப்பவராகப் பணியாற்றி வந்தார். சில காரணங்களுக்காக அவரை அச்சங்கம் வேலையிலிருந்து நீக்கிவிட்டது

அதற்குப் பின்பு வேலையில்லாதிருந்த காலத்திலேதான் விமான ஓட்டிகளுக்கான கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தினாரயம்.

## பாரதம் பற்றி அரவிந்தர் ★

இன்று மேற்கு நாடுகளில் இராமாயணம், மகாபராதம் ஆகியவற்றிற்கு நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

ரஷ்யாவில் இராமாணமும் மகாபாரதமும் நாடகமாக நடிக்கப்பட்ட செய்தியையும் படித்தோம். அந்த மகத்தான மகாபாரதம் பற்றி அரவிந்தரின் அரிவி கருத்தை இங்கு தருகிறேன்:

மகாபாரதம் என்பது நாட்டின் மரபைத் தன்னகத்தே கொண்டுள்ள வெறும் பரதர்களுடைய கதை மாத்திரமல்ல. இந்தியாவின் ஆன்மாவையும், சமயத்தையும், அரசியல் இலட்சியங்களையும், பண்பாட்டையும். வாழ்க்கையையும் எடுத்துச் சொல்கிற இதிகாசம் அது. இந்தியாவில் என்னென்னவெல்லாம் இருக்கின்றதோ அதெல்லாம் பாரதத்தில் அடங்கியிருக்கிறது. மகாபாரதம் என்பது ஒரு தனி மனிதனால் படைக்கப்பட்டதல்ல இந்திய நாட்டின் மக்கள் எல்லோரும் சேர்ந்து அதைப் படைத்திருக்கிறார்கள். வியாச மகரிஷி இந்தப் பிரமாண்டமான இதிகாசத்தை எழுதினார் என்று சொல்வதைக்காட்டிலும் பல கோடி இந்திய மக்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ஒரு கூட்டுத்தவம் செய்து இந்த இதிகாசத்தை உண்டுபண்ணி வியாசரை ஓர் எழுதுகோலாகக்கொண்டு இதை எழுதினார்கள் என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு...

படுத்துவதே இலட்சியங்களாகக்கூட மாறலாம். இதன் விளைவாக இறுதிக் குறிக்கோளுக்கு முரண்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரலாம். இத்தகைய நிகழ்விற்கு மத நிறுவனங்களும், அரசியற் கட்சிகளும் நல்ல உதாரணங்கள். இக்கதி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்படலாம்.

இறுதியாக தனிப்பட்ட கோணத்தில் நோக்கினால் பாரதூரமான ஒழுக்கக் குறைபாடுகள் நிகழ்ந்திருக்கின்றன. கீழ்மட்டத்தில் கூட்டுறவுக் கடைகளில் நிகழும் சிறு களவுகளாக இருக்கலாம் அல்லது பொருட்களை இல்லங்களில் வழங்கும்போது மோசடிகளைச் செய்வதாக இருக்கலாம். மேல்மட்டத்தைப் பொறுத்தவரை தலைவர்கள் தமக்குச் சதகமான முறைகளில் சில அனுகூலங்களை அனுபவிக்கலாம். இந்த நன்மைகள் நிதிசார்ந்தவையாகவோ அல்லது பொருள்பண்டம் சார்ந்தவையாகவோ இருக்கலாம் இவை பெரும்பாலும் மறைவானவையாக இருக்கின்றன. அடிமட்டத்திலுள்ள தொழிலாளியும், விவசாயியும் கண்டிக்கக் கூடியவையாக இவை இருக்கின்றன கொள்வனவு செய்யும் பிரிவுகள் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுமாறு வழங்கீட்டாளர்களால் வற்புறுத்தபபடுகின்றனர். பல்வேறு நாடுகளிலே அம்பலத்துக்கு வந்துள்ள நிகழ்வுகளிலிருந்து இத்தகைய வழக்கம் முதலாளித்துவ வியாபார உலகில் பரவியிருக்கின்றது என்பதை நாம் அறிவோம் கொள்வனவுக்குப் பொறுப்பாகவுள்ள கூட்டுறவாளர் இத்தகைய கையூட்டுக்களை எப்பொழுதும் மறுக்கின்றனரா?

"அரசன் எவ்வழி குடிமக்கள் அவ்வழி" என்பார்கள் மேல்மட்டத்தினரின் முன்மாதிரி அடிமட்டம் வரை பரவுகின்றது களங்கமுடைய ஒரு முகாமையாளர் தனக்குக் கீழே வேலை பார்க்கும் ஒருவரைக் கடிந்து கொள்வதற்குத் தகுதியற்றவர்.

பொருளாதாரப் போட்டி தமது முழுக்கவனத்தையும் ஈர்ப்பதால் கூட்டுறவுச் சங்கங்கள் தமது அறவொழுக்கக் குறிக்கோள்களுக்குப் போதிய அழுத்தம் இன்று கொடுப்பதில்லை.

நாம் கூறியவற்றிலிருந்து தொழில்மயப்படுத்தப்பட்ட நாடுகளிலே கூட்டுறவு இயக்கம் பொருளாதார அமைப்பில் கோலோச்சும் என்ற நம்பிக்கையைப் பலர் இழந்து விட்டனர் என்பது புலப்படும். அவ்வாறு எண்ணக்கூட அவர்கள் துணியமாட்டார்கள். இந்த நிலையில் கூட்டுறவு இயக்கத்தின் கோட்பாட்டாளர் கவலையுற்றிருக்கின்றனர்.

கூட்டுறவுச் செயற்பாட்டின் ஊற்றுக்கண்கள் அடைக்கப்பட்டு வருகின்றன. மனித குலத்தின் முன்னேற்றத்திற்காகப் போராடுகின்றோம் என்ற திடமான நம்பிக்கை–இதில்தான் பற்றுறுதியும் விசுவாசமும் தியாக உணர்வும் தங்கியிருக்கின்றன–குன்றி வலுவிழந்து விட்டது. கூட்டுறவுச் சங்கங்களின் அறவொழுக்க மூலதனம் கரைந்து கொண்டே போகின்றது.–தனிப்பட்ட செயல் நோக்கங்களும் நலிவுற்றிருப்பதால் நிலைமை ஆபத்தாகலாம்.

(முற்றும்)

---

## தனிநாயகமும் சபாநாயகமும் ★

1951-ம் ஆண்டில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவின் ஒரு நாள் கூட்ட நிகழ்ச்சி தமிழறிஞர் ரா பி சேதுப்பிள்ளையின் தலைமையில் நடைபெறுவதாக இருந்தது. அவர் குறித்த நேரத்திற்கு வராதமையால் அவரை எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பின்பு அக்கூட்டத்தின் முதலாவது பேச்சாளராக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தனிநாயக அடிகளார் தனது பேச்சைத் தொடங்கிப் பேசிக்கொண்டிருக்கையில் பிள்ளையவர்கள் வந்துவிட்டார்

தனிநாயக அடிகளார் பேசி முடிந்ததும், பிள்ளையவர்கள் தனது காலதாமதம் பற்றியும், கூட்ட ஆரம்பத்திலிருந்தே தான் தலைமை வகிக்காதது பற்றியும் மன்னிப்புக் கேட்டு விட்டு, "ஆனால் தனிநாயகத்தின் பேச்சிற்குச் சபாநாயகம் தேவையில்லை இனித்தான் நான் தலைமையுரை நிகழ்த்தப்போகிறேன்" என்றார்.

சபையில் பலத்த இரசனை ஆரவாரம் எழுந்தது.

# கூட்டுறவுத்தினவிழா மலர்

நல்லூர் ப. நோ. கூ. சங்கம் கூட்டுறவுத் தின விழாவையிட்டு சிறப்புமலரை வெளியிட்டுள்ளது. உண்மையிலே அது சிறப்பு மலர்தான் என்று சொல்லும் வகையில் அது நறுமணத்தால் எல்லோரையும கவர்கிறது.

அம்மலரில் கூட்டுறவாளர்களினதும் சிறந்த எழுத்தாளர்களினதும் கைவண்ணங்கள் சந்தைக்கு விருந்தளிக்கின்றன.

கூட்டுறவு விடயம் மாத்திரமல்ல இலக்கியம், வரலாறு பற்றிய கட்டுரைகளையும் அம்மலர் தாங்கியிருக்கிறது. கூட்டுறவின் நோக்கம் சமூக பொருளாதார கலாசார வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல் என்பதாகும். அதனை இம் மலர் பிரதிபலிப்பதாக அமைகிறது. கூட்டுறவு என்ற உன்னத இலட்சிய வாழ்வு முறையை மக்களுக்கு இனிக்கும்படி விளங்க வைக்க கலை அவசியம் என்பதை இம் மலரை வெளியிட்டோர் சரியாக உணர்வதாகர் தெரிகிறது. கூட்டுறவுத்துறை இந்த மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும். —தேனீ

# பொல்கொலவில் பயிற்சி வகுப்பு

மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பத்து சங்கங்களைச் சேர்ந்த மகளிர் அங்கத்தவர்கள், கல்வி உத்தியோகத்தர்கள் இணைப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு ஆகஸ்ட் 9 ந் திகதியும் 10 ந் திகதியும் பொல்கொலவில் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன.

முதல்நாள் பயிற்சி வகுப்பைத்திட்டப் பணிப்பாளர் தொடக்கி வைத்தார். திருமதி திசநாயக்கா உணவு பாதுகாப்பு முறை பற்றி விரிவுரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து செயல் முறைப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

அன்னாசி, பூசணிக்காய் முதலியவற்றில் ஜாம் தயாரித்தல். சாதிக்காய், கொய்யா முதலிய பொருள்களில் ஜெலி தயாரித்தல் தோடம்பழத்தில் மாமலட் தயாரித்தல் ஆகியன குறித்து விரிவுரை நிகழ்த்தப்பட்டது. பின்பு அவைபற்றிய செயல்முறைப் பயிற்சி நடைபெற்றது.

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

# ப. நோ. கூ. ச. முகாமையும்...

கருத்தரங்குகளை அங்கத்தவர் மத்தியிலே நடாத்தி அவர்கட்டு இன்றைய நிலையை எடுத்துக் கூறி அங்கத்துவ பற்றற்ற தன்மையை நீக்க வேண்டும். இதனால் சங்கங்கள்மீது மக்களுக்கு தப்பெண்ணம் ஏற்பட இடமளிக்காது அவர்களது முறைப்பாடுகள் ஆலோசனைகள் என்பவற்றைப் பெற்று பொதுசன கொள்கையை விஸ்தரிக்க வேண்டியது முக்கியமாகும். அத்தோடு கொள்வனவுக் கொள்கை, விற்பனைக் கொள்கை, விலை நிர்ணயக் கொள்கை என்பவற்றிலும் முகாமை முக்கிய கவனமெடுக்க வேண்டும். கொள்வனவுக் கொள்கை எனும்போது திட்டமிட்ட கொள்வனவைக் குறிக்கின்றது இன்றைய நிலையிலே போட்டிபோடக் கூடிய பொருட்கள்யாவை? விரைவில் கழற்சியடையக் கூடிய பொருட்கள் யாவை? எங்கு கொள்வனவை செய்வது? இக்கொள்வனவால் ஆதாயம் ஏற்படுமா? என்பதை முதலில் திட்டமிட்டு அடுத்ததாகத் தரமான பொருட்களையும் மக்கள் மத்தியில் சுழற்சியடையக் கூடிய பொருட்களையும் கொள்வனவு செய்ய வேண்டும். சில சந்தர்ப்பங்களில் இது கவனிக்கப்படாமையால் தரமற்ற பொருட்களும் சுழற்சி வேகம் குறைந்த பொருட்களும் கொள்வனவு செய்வதால் மூலதனம் மறைமுகமாக முடக்கப்படுகின்றது. எனவே கொள்வனவிலே முகாமை கவனம் செலுத்துவதோடு விற்பனைச் கொள்கையையும் கடைப்பிடிக்கவேண்டும். விற்பனையில் விலை நிர்ணயம் அதி முக்கியமெனலாம். ஏனெனில் போட்டி நிறைந்த வியாபார உலகில் வெளிச்சந்தை விலை நாளுக்குநாள் வேறுபடலாம்.

அதற்கேற்ப சங்கமும் விலை நிர்ணயிக்க வேண்டும் சரியான விலைநிர்ணயக் கொள்கையின்மையும் இன்றைய நிலைக்குக் காரணமாகலாம், எனவே அடிப்படை திட்டமிட்டகொள்வனவு எனலாம்.

விற்பனைக் கொள்கையை இன்றைய நிலைக்கேற்றவாறு திருத்தியமைத்துக் கொள்வனவுக்கு வரும் வாடிக்கையாளரை இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்து அன்பாகப் பழகுவதன் மூலம் அங்கு மறைமுகமாக விற்பனையை ஏற்படுத்த இலகுவாகும்.

இன்றைய நிலையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையானது மேற்காட்டப்பட்ட கூற்றுப்படி பொதுசனத் தொடர்பு பணியாளர் நல்லுறவு, திட்டமிட்ட கொள்வனவு, விற்பனவு, விலை நிர்ணயம் என்பவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் உச்சப்பயனை அடைய முடியும் என்பதில் ஐயமில்லை.

நன்றி—இளம் அருவி

# அளவெட்டியில் மகளிர் குழு

அளவெட்டி மல்லாகம் ப நோ. கூ. சங்கத்தின் அண்மையில் நடைபெற்ற மகளிர் குழு அமைப்பு கூட்டத்தில் அதன் தலைவியாக செல்வி சிங்காரவேல் தெரிவு செய்யப்பட்டார்;

மேற்படி சங்கத் தலைவர் திரு ந.பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம் மகளிர் குழுவின் நோக்கம் செயற்பாடு ஆகியவை பற்றி விரிவுரை நிகழ்த்தினர்

தெல்லிப்பளை ப நோ. கூ. சங்க மகளிர் பாவனையாளர் கல்வித்திட்ட செயலாளர் செல்வி பி ஆறுமுகம் போஷாக்கு முக்கியம் குறித்து உரையாற்றினர்.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு பி.ஜே சி.கனகசிங்கம் திருமதி அ.தவபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்

## ஆரப்பக் கூட்டம்

கட்டைக்காடு சென் மேரிஸ் கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கத்தின் ஆரம்பக் கூட்டம் அண்மையில் கடற்றொழில் பரிசோதகர் திரு. தேவநாயகத்தின் தலைமையில் நடைபெற்றது

சங்க உத்தியோகத்தர் தெரிவில் தலைவராக திரு க. ஆசீர்வாதமும், உபதலைவராக திரு. கொ, அ ஸ்ரனிஸ்லாசும் தெரிவுசெய்யப்பட்டனர்.

செயலாளராக திரு சூ. மரியாம்பிள்ளையும், உப செயலாளராக திரு. வ. மி. மருசலீனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொருளாளராக திரு. ஏ பெனடிக்ற் அன்ரனியும், திருவாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் அ. கொன்ஸ்ரன்ரையினும். யோ. சூசைபெர்னன்டோவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவால் தேசீய...

அதற்கு எங்களை உதவியளிக்குமாறும் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் தனது பேச்சிலே இங்கு குறிப்பிட்டார். கூட்டுறவின் வளர்ச்சி கருதி யுவ்விடயத்தில் என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்வேன். அடுத்த வரவு செலவுத் திட்டம் வரும்போது இதுபற்றி நான் எடுத்துக் கூறுவேன்.

யாழ்மாவட்டக் குழுத் தலைவர் திரு. ஆ.மு. ஆலாலசுந்தரம் ஆரம்பத்தில் தனது தலைமையுரையில், "மக்கள் இயக்கமாக கூட்டுறவு இயக்கம் மீண்டும் மக்களிடம் கையளிக்கப்பட்ட இன்றைய சந்தர்ப்பத்தில் நாம் கூட்டுறவுக் கல்வியறிவை வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும்', என்று குறிப்பிட்டார்.

இளைய தலைமுறைகளை இந்த இயக்கத்திலே உழைக்கத்தூண்டி தேசிய செல்வத்தைப் பெருக்க கூட்டுறவு இயக்கம் முயற்சியெடுக்க வேண்டும் என்று தொடர்ந்து பேசுகையில் அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வெ யோகேஸ்வரன் பேசுகையில் கூட்டுறவு இயக்கம் பலம் மிக்க ஓர் இயக்கம். விழிப்புணர்ச்சியுடன் அதில் உழைத்தால்தான் வெற்றி பெற முடியும் என்றார்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவர் திரு ரீ. ராஜநாயகம், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோரும்பேசினர். மாவட்டச் செயலாளர் திரு. ம. பத்திநாதன் நன்றி கூறினார்.

கூட்டுறவுத் தினவிழாப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினர்.

# வருடாந்தக் கூட்டம்

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக திரு. கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

திரு இ செல்லத்தம்பி உபதலைவராகவும், திரு. சி. சிவலிங்கம் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

அண்மையில் மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு வே. நடராசா தலைமை வகித்தார்.





உங்கள்
அபிமானத்துக்குரிய
"மில்க்வைற் நீலசோப்"
பளிச்சிடும்
வெண்மைக்கும்;
சம்பூரண சலவைக்கும் மிகவும் சிறந்தது.
வாங்கி உபயோகியுங்கள்
விலை ரூபா 1-25 சதம் மட்டுமே
மேலுறைகளை அனுப்பி பெறுமதிவாய்ந்த
பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


யா. ப. நோ கூ ச. இணையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு. ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 18, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். 341-79
Registered as a News Paper at the General Post Office, Sri Lanka Under No. QB/8965/80